
**பிப்ரவரி – 01**

# TNPSC துளிகள்

❖ தூர்தர்ஷன் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிறுவனமானது, வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் கல்வி குறித்த விரிவான ஒரு பிரச்சாரத்திற்காக வேண்டி மின்னணு ஊடகப் பிரிவில் விருதினைப் பெற்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## கூடுதல் அரிசி ஒதுக்கீடு – தமிழ்நாடு




❖ தமிழ்நாடு பொது விநியோகக் கழகமானது, அதன் தேவைகளில் உள்ள பெரும் பற்றாக்குறையைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டி இந்திய உணவுக் கழகத்திடம் (FCI) கூடுதலாக ஒன்பது லட்சம் டன் அரிசி ஒதுக்கீட்டைக் கோரியுள்ளது.

❖ மாநில அரசுகளுக்கு விற்பனை செய்வதற்கான அரிசியின் இருப்பு விலை என்பது ஒரு கிலோவிற்கு (இந்தியா முழுவதும்) 22.5 ரூபாய் ஆக நிர்ணயிக்கப்பட்டது.

❖ இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 2023 ஆம் ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மத்திய அரசு ஆனது மாநில அரசுகளுக்கான இந்த விற்பனை விலையை ஒரு கிலோவிற்கு 23 ரூபாயிலிருந்து 34 ரூபாயாக உயர்த்தியது.

❖ மேலும், மாநிலங்களுக்கு வேண்டிய அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றின் மீதான விற்பனை யையும் நிறுத்தியது.

❖ தமிழ்நாடு மாநிலத்திற்கான 2.97 லட்சம் டன்கள் என்ற மாதாந்திர ஒதுக்கீட்டிற்குப் பதிலாக, சராசரியாக மாதாந்திர அரிசி கொள்முதல் ஆனது சுமார் 3.63 லட்சம் டன் ஆகும்.


# தேசியச் செய்திகள்

## குடியிருப்பு அடிப்படையிலான ஒதுக்கீடு குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

❖ தமது மாநில ஒதுக்கீட்டிற்குள் முதுகலை (PG) மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான

குடியிருப்பு அடிப்படையிலான இடஒதுக்கீடு செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

- அரசியலமைப்பின் கீழ், இது அனைவருக்கும் ஒரு குடியுரிமை மற்றும் ஒரு சமத்துவ உரிமை ஆகிய கருத்துக்கு எதிரானது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- MBBS படிப்புகளுக்கு நியாயமான அளவிற்கு குடியிருப்பு அடிப்படையிலான இட ஒதுக்கீடு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நீதிமன்றம் அங்கீகரித்து உள்ளது.
- மாநில அரசுகள் ஆனது, 'வசிப்பிடம்' என்பதை ஒரு 'குடியிருப்பு' என்பதற்கு ஒத்ததாக எவ்வாறு பயன்படுத்துகின்றன என்பதை நீதிமன்றம் சுட்டிக் காட்டியது.
- சட்டப்பூர்வமாக, 'வசிப்பிடம்' என்பது ஒரு தனிநபரின் 'குடியிருப்பு' என்று பொருளல்ல.
- பிராந்திய அல்லது மாகாண குடியிருப்பு என்ற கருத்துரு ஆனது இந்தியச் சட்ட அமைப்புக்கு அந்நியமானது.
- நிரந்தரக் குடியிருப்பு அல்லது குடியிருப்பு என்பது 'வசிப்பிடம்' என்பதிலிருந்து மிகவும் வேறுபட்ட ஒரு பொருளைக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு பொதுவாக 69% இடஒதுக்கீட்டை அமல்படுத்தி வருகிறது.
- இது தமிழக மாநிலத்தினைச் சேர்ந்த அல்லது மாநிலத்தில் பிறந்த மாணவர்களுக்கு 50% இடங்களை ஒதுக்குகிறது.
- முதுகலை மருத்துவப் படிப்புகளில் (MD/MS/Diploma), தமிழ்நாட்டில் மொத்தமாக 2,294 இடங்கள் உள்ளன.
- இதில், 50% இடங்கள் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன, இதன் மூலம் சுமார் 1,200 மாணவர்கள் பயனடைகின்றனர்.




# சர்வதேசச் செய்திகள்

## பாஷ்மினா திருவிழா 2025

- முதலாவது மூன்று நாட்கள் அளவிலான சர்வதேச பாஷ்மினா விழா மற்றும் அதன் கண்காட்சியானது, நேபாள பாஷ்மினா தொழில்துறைச் சங்கத்தினால் நேபாளத்தின் காத்மாண்டு நகரில் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இயற்கையாகவே உதிர்க்கும் பருவத்தில் சியாங்ரா வகை ஆடுகளின் உட்தோலில்


இருந்து பாஷ்மினா கைகளால் சீவி அகற்றப் படுகிறது.

❖ நேபாள ரக பாஷ்மினா ஆனது, அதன் உயர் தரத்தை வலியுறுத்துவதற்காக "சியாங்ரா பாஷ்மினா" என்று சந்தைப்படுத்தப்படுகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## முதன்மை நோக்கச் சோதனை (PPT)




❖ இந்தியாவின் இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்களின் (DTAAs) கீழ் முதன்மை நோக்கச் சோதனை (PPT) முறைகளைப் பயன்படுத்துவதற்கான ஒரு புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டுதலை மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) ஆனது வெளியிட்டுள்ளது.

❖ இது இந்தியா-சைப்ரஸ் DTAA, இந்தியா-மொரீஷியஸ் DTAA மற்றும் இந்தியா-சிங்கப்பூர் DTAA ஆகியவற்றின் கீழ் உள்ள சில விதிகளுக்கு விலக்கு அளிக்கிறது.

❖ வரி ஒப்பந்தங்களை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கிலான சர்வதேச வரி விதிகளின் ஒரு பகுதியாக PPT உள்ளது.

❖ வரிவிதிப்பிற்கான மூலம் மற்றும் இலாப மாற்றத்தினைத் (BEPS) தடுப்பதற்காக வரி ஒப்பந்தத்தினை அமல்படுத்துவதற்கான பலதரப்பு உடன்படிக்கையின் கீழ் இது ஒரு முக்கிய விதியாகும்.

❖ DTAA ஒப்பந்தங்கள் என்பது ஒரே வருமானம் மீது இரண்டு முறை வரி விதிக்கப்


படுவதைத் தடுக்கும் நோக்கிலான இருதரப்பு ஒப்பந்தங்கள் ஆகும்.

## தற்காலிக அடையாள எண் – TIN

- மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் (CBIC) ஆனது, சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிகளில் ஒரு புதியத் திருத்தத்தினை அறிவித்துள்ளது.
- GST சட்டத்தின் கீழ் பதிவு செய்யத் தேவையில்லாத ஆனால் சில குறிப்பிட்ட விதிகளின் கீழ் பணம் செலுத்த வேண்டிய நிறுவனங்களுக்கு TIN எண்களை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சரக்கு மற்றும் சேவை வரி (GST) விதிகளின் கீழ், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் முறையே 40 லட்சம் ரூபாய் மற்றும் 20 லட்சம் ரூபாய் வருடாந்திர வருவாய் கொண்ட வணிகங்கள் GST தளத்தில் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும்.




## eCoO 2.0 அமைப்பு




- வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (DGFT) ஆனது, நன்கு மேம்படுத்தப்பட்ட பூர்வாங்க / தோற்றச் சான்றிதழ் (eCoO) 2.0 அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.

- இது ஏற்றுமதியாளர்களுக்கான சான்றிதழ் செயல்முறையை மிக எளிதாக்குவதற்கும் வர்த்தக செயல்திறனை மேம்படுத்துவதற்கும் என வடிவமைக்கப்பட்ட ஒரு குறிப்பிடத் தக்க மேம்படுத்தல் அம்சம் ஆகும்.
- இந்த மேம்படுத்தப்பட்ட தளம் ஆனது, பல பயனர் அணுகல் போன்ற பயனர்களுக்கு ஏதுவான பல அம்சங்களை கொண்டுள்ளது என்பதோடு இது ஏற்றுமதியாளர்கள் ஒரு இறக்குமதியாளர் ஏற்றுமதியாளர் குறியீட்டின் (IEC) கீழ் பல பயனர்களை அங்கீகரிக்க உதவுகிறது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல், ஒரு முன்னுரிமை சாராதப் பூர்வாங்கச் சான்றிதழ்களை மின்னணு முறையில் தாக்கல் செய்வது என்பது eCoO 2.0 தளம் வழியாக கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- பூர்வாங்கச் சான்றிதழ்கள் (CoO) என்பவை ஏற்றுமதி செய்யப்பட்டப் பொருட்களின் தோற்றுருவினை அங்கீகரிக்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## NVS-02 - ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஏவப்பட்ட 100வது செயற்கைக்கொள்





- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதியன்று ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து அதன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க 100வது ஏவுதலை மேற்கொண்டது.
- NVS-02 செயற்கைக்கோளுடன் கூடிய GSLV-F15 ஏவு கலமானது, விண்வெளி மையத்தின் இரண்டாவது ஏவுதளத்திலிருந்து ஏவப்பட்டது.
- NVS-02 ஆனது, NVS தொடரின் இரண்டாவது செயற்கைக்கோள் ஆகும்.
- GSLV-F15 என்பது இந்தியாவின் புவி ஒத்திசைவு செயற்கைக்கோள் ஏவு வாகனத்தின் (GSLV) 17வது ஏவல் மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கிரையோ எஞ்சின் என்ற நிலை கொண்ட 11வது ஏவுதலாகும்.
- இது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கிரையோஜெனிக் எஞ்சின் நிலை கொண்ட GSLV வாகனத்தின் 8வது செயல்பாட்டு ஏவலாகும்.
- இங்கு 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 ஆம் தேதியன்று, முதல் முறையாக ரோகிணி தொழில்நுட்பச் சாதனத்தினைச் சுமந்து செல்லும் செயற்கைக்கோள் ஏவு வாகனம்-3

(SLV-3 E10) என்ற ஏவு கலத்தின் சோதனை ஏவல் ஆனது மேற்கொள்ளப்பட்டது.

## உலகின் முதல் ஆழ்கடல் ரேடார்

- சீன அறிவியல் ஆய்வாளர்கள் மிக அதிக உயரங்களில் பறக்கும் விமானங்களைக் கூட கண்டறியும் திறன் கொண்ட உலகின் முதலாவது கடல் படுகை 'ரேடாரை' உருவாக்கி உள்ளதாகக் கூறுகின்றனர்.
- இது சீனாவின் உளவு /புலனாய்வு வலையமைப்பை மிகவும் கணிசமாக மேம்படுத்தி எதிர்காலத்தில் கடற்படை சார்ந்த அதன் போர்த் திறனை மறுவடிவமைக்க கூடும்.
- இது 1,000 மீட்டர் ஆழத்தில் கடற்பரப்பில் நிலைநிறுத்தப்பட்ட ஓர் ஒலி உணர்வு தொடர் ஆகும்.
- இது சுமார் 5,000 மீட்டர் உயரத்தில் பறக்கும் ஒரு நிலையான இறக்கை கொண்ட ஒரு விமானத்தினைக் கண்டறிந்து கண்காணித்ததாகக் கூறப்படுகிறது.
- சீனா ஏற்கனவே அமெரிக்காவின் ரேடாருக்குப் புலப்படாத F-22 ரக போர் விமானங்கள் உட்பட உலகளாவிய விமானங்களைக் கண்காணிக்கும் திறன் கொண்ட ஒரு பெரும் செயற்கைக்கோள் வலையமைப்பை இயக்குகிறது.





# சுற்றுச்சூழல் செய்திகள்


## நம்தாபா தேசியப் பூங்காவில் யானை

- 12 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவின் தூரகிழக்குப் பகுதியான நம்தாபா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் வளங்காப்பகத்தில் ஒரு யானை ஒளிப்படக் கருவியில் தென் பட்டுள்ளது.
- கடைசியாக இங்கு யானைகள் 2013 ஆம் ஆண்டில் இதுபோன்று ஒளிப்படக் கருவியில் பதிவு செய்யப்பட்டது.

- நம்தாபா தேசியப் பூங்காவானது அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் சாங்லாங் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- 1983 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தத் தேசியப் பூங்காவானது, அதிகப் பல்லுயிர்ப் பெருக்கம் நிறைந்த இடமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பூங்காவில் சுமார் 1,000க்கும் மேற்பட்ட தாவர இனங்களும் சுமார் 1,400 விலங்கு இனங்களும் உள்ளன.




## ருஷிகுல்யா முகத்துவாரத்தில் ஆலிவ் ரெட்லி ஆமைகள்




- ஆலிவ் ரெட்லி ஆமைகள் / சிற்றாமைகள், 2024 ஆம் ஆண்டில் அவற்றின் ஒரு கூட்டாக முட்டையிடும் பணிக்காக ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ருஷிகுல்யா நதி முகத்துவாரத்தைத் தவிர்த்தன.
- ருஷிகுல்யா நதி முகத்துவாரம் ஆனது, நாட்டின் முக்கிய இனப்பெருக்கக் கூட்டுறைப்

பகுதிகளில் ஒன்றாகும் என்ற நிலையில் அங்கு மில்லியன் கணக்கான பெண் ஆலிவ் ரெட்லி ஆமைகள் ஸ்பானிய மொழியில் அரிபாடா எனக் கூறப்படும் வலையமைப்பு செயலுக்காக திரள்கின்றன.

- ஒடிசாவில் ஆலிவ் ரெட்லி ஆமைகளின் கூட்டாக முட்டையிடும் பணிக்கான சில மற்ற இடங்கள் முறையே கேந்திரபாரா மற்றும் பூரி மாவட்டங்களில் உள்ள காஹிர்மாதா மற்றும் தேவே நதி முகத்துவாரம் ஆகும்.
- 2002, 2007, 2016, 2019, 2021 மற்றும் 2024 ஆகிய சில ஆண்டுகளில் இந்த ஆற்றின் முகத்துவாரத்தில் கூட்டமாக முட்டையிடும் பணிக்கான நிகழ்வு தவிர்க்கப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## சாம்பார் திருவிழா 2025





- இது இராஜஸ்தானில் உள்ள மிகப் புகழ்பெற்ற சாம்பார் ஏரியின் கலாச்சாரம், சாகசம் மற்றும் பாரம்பரியத்தின் கொண்டாட்டமாகும்.
- இது சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, அந்தப் பிராந்தியத்தின் வளமான கலாச்சாரம், மரபுகள் மற்றும் அதன் இயற்கை அழகைக் காட்டுகிறது.
- இந்த ஏரியானது அதன் உப்பு உற்பத்திக்கும், மில்லியன் கணக்கான வெளிநாட்டுப் பறவைகள் வலசை செல்லும் இடமாகவும் திகழ்கிறது.

## கொரகா பழங்குடியினரின் மக்கள் தொகை

- பிறப்பு விகிதம் மிகவும் குறைந்து பச்சிளம் குழந்தை உயிரிழப்பு விகிதம் அதிகரித்து வருவதால், கொரகா பழங்குடியினரின் மக்கள் தொகை மிக வெகுவாகக் குறைந்து வருகிறது.

- சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு, கொரகர்களின் எண்ணிக்கையானது 20,000 ஆக இருந்தது, ஆனால் தற்போது இது 16,000 ஆகக் குறைந்துள்ளது.
- கொரகா பழங்குடியினர் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பழங்குடியினக் குழுவாக (PVTG) வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
- அவர்கள் முதன்மையாக தட்சிண கர்நாடக மாவட்டத்திலும் உடுப்பி மாவட்டத்திலும் வசிக்கின்றனர்.
- முன்னதாக, கேரள மாநில அரசு இப்பழங்குடியினர் வீடுகளுக்குச் சத்தான உணவை வழங்குவதற்கான திட்டங்களைத் தொடங்கியுள்ளது.
- இந்துக்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ள கொரகர்கள் தனித்துவமானப் பழங்குடி மத வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுகிறார்கள்.
- பூதங்கள் எனப்படும் ஆன்மாக்களை வணங்கும் அவர்கள் மந்திரம் & சடங்குகளின் சக்தியை நம்புகிறார்கள்.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்தியாவின் ஆப்பிள் மனிதன்


- இமாச்சலப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த விவசாயியான ஹரிமன் சர்மா, இந்திய வேளாண்மையில் ஒரு மாறுதல் மிக்கப் பங்களிப்பினை ஆற்றியதற்காகச் சமீபத்தில் பத்மஸ்ரீ விருதினைப் பெற்றார்.
- அவர் 'இந்தியாவின் ஆப்பிள் மனிதன்' என்று பிரபலமாக அறியப்படுகிறார்.
- கீழ் மட்ட மலைகளில் மிகவும் வெப்பமான சூழ்நிலையில் பயிரிடக்கூடிய ஓர் ஆப்பிள் வகையை உருவாக்கியதன் மூலம் அவர் ஆப்பிள் சாகுபடியில் புரட்சியை ஏற்படுத்தி உள்ளார்.
- ஆப்பிள்களைக் குளிர்ந்தச் சூழ்நிலையில் மைய மற்றும் உயர் மட்ட மலைகளிலும் மட்டுமே வளர்க்க முடியும் என்று முன்னர் நம்பப்பட்டது.
- அவர் HRMN-99 எனப்படும் புதுமையான, சுய-மகரந்தச் சேர்க்கை செய்யும், குறைந்த

குளிர்ச் சூழல் தேவையான ஆப்பிள் வகையை உருவாக்கினார்.

❖ HRMN-99 என்பது கோடை வெப்பநிலை 40-45°C அளவினை எட்டும் அதிவெப்ப மண்டல, துணை வெப்பமண்டல மற்றும் சமவெளி இடங்களில் கூட செழித்து வளர்கிறது.




## லிபியா லோபோ சர்தேசாய்




❖ கோவாவின் சுதந்திரப் போராட்ட வீரர் லிபியா லோபோ சர்தேசாய் (100 வயது), மாநில விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கியப் பங்கு வகித்ததற்காக பத்மஸ்ரீ விருதினைப் பெற்றார்.

❖ 1955 முதல் 1961 ஆம் ஆண்டு வரை, லிபியாவும் அவரது சகா வாமன் சர்தேசாய்யும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காடுகளில் இருந்த படி ஒரு தலைமறைவு வானொலி நிலையத்தை நடத்தினர்.


❖ நான்கரை நூற்றாண்டு காலப் போர்த்துகீசிய ஆட்சியில் இருந்து கோவா விடுதலை பெற்ற அச்செய்தியை 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று வானொலியில் அறிவித்தவர் இவரே ஆவார்.

- 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 19 ஆம் தேதியன்று காலை, லிபியாவும் வாமனும் இந்திய விமானப்படை (IAF) விமானத்தில், ஒரு ரேடியோ அலைபரப்பியினையும், விமானத்தின் அடிப் பகுதியில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்கியையும் ஏற்றிக் கொண்டு, பனாஜி மீது பறந்தவாறே பல துண்டுப் பிரசுரங்களை வீசி, போர்த்துகீசியம் மற்றும் கொங்கனி மொழிகளில் போர்த்துகீசியர்கள் சரணடைந்ததாக அறிவித்தனர்.

# முக்கிய தினங்கள்

## தியாகிகள் தினம் - ஜனவரி 30

- இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக தங்கள் உயிரைத் தியாகம் செய்தவர்களின் தியாகங்களை கௌரவிக்கும் வகையில் இந்தியாவில் ஆண்டுதோறும் இந்தத் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இத்தினமானது இந்தியாவின் அகிம்சை வழி சுதந்திரப் போராட்டத்தின் தலைவரான M.K. காந்தி அவர்களின் நினைவு தினத்தைக் குறிக்கிறது.
- 1948 ஆம் ஆண்டு டெல்லியில் உள்ள பிர்லா பவனில் நடைபெற்ற ஒரு பிரார்த்தனைக் கூட்டத்திற்குச் செல்லும் வழியில் M.K.காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்டார்.





## புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்களுக்கான உலக தினம் - ஜனவரி 30

- 2021 ஆம் ஆண்டு மே 31 ஆம் தேதியன்று, உலக சுகாதாரச் சபை (WHA) ஆனது இந்த நாளை அங்கீகரித்தது.
- இந்த நோய்களைக் கட்டுப்படுத்துதல், நீக்குதல் மற்றும் ஒழிப்பதற்கான அதிகரித்து வரும் உந்துதலை ஆதரிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் தினமானது ஒரே நேரத்தில் வெளியிடப்பட்ட முதலாவது NTD செயல் திட்டம்

(2012-2020) மற்றும் NTD நோய்கள் குறித்த இலண்டன் பிரகடனம் ஆகியவற்றின் ஒரு நிகழ்வினைக் குறிக்கிறது.

❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Unite. Act. Eliminate" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★